

பாமாலை 463 மெய்யாம் வாசஸ்தலமுண்டே

1 மெய்யாம் வாசஸ்தலமுண்டே

ஜீவ நதியின் ஓரத்திலாம்

மோட்ச வாசிகளானவரே

மா தூய சம்பூரணராம்

பல்லவி

அங்குதான் அங்குதான்

மெய்யாம் வாசஸ்தலம் உண்டே

2 என் பிரிய சிநேகிதரும்

அந்த ஸ்தலத்தில் சென்றிருப்பார்

பரஞ் ஜோதி சமூகத்திலும்

சுக வாழ்வையும் பெற்றிருப்பார்

3 என் அருமை ரட்சகரும்

பரலோகத்தின் சூரியனாம் ;

அந்த வீட்டில் நான் சேர்ந்திடவும்

நீங்கிப் போகும் விசாரமெல்லாம்

4 சேர்வேன் அதி சீக்கிரமே

மோட்ச லோகத்தில் ஆனந்திப்பேன்

ஜீவ நதியின் ஓரத்திலே

என் மீட்பரை ஸ்தோத்திரிப்பேன்